ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2414/09 - 2024 දෙසැම්බර් මස 10 වැනි අඟහරුවාදා - 2024.12.10
2414/09 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பி.செ. தொடர் இல.: MUL/LND/02/ACQ/97(II).
காணி அமைச்சின் இல.: 4-3/8/2018/PC/418.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலாளர் அலுவலகத்தின் 275/C ஆம் இலக்க, கல் எட்டும்ப கிராம அலுவலர் பிரிவுக்கு சொந்தமான கல் எட்டும்ப கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2024.11.18 ஆம் திகதிய 820415 ஆம் கெடெஸ்தர் வரைபட இலக்க நில அளவைப் படத்தில் 04 ஆம் தொகுதி இலக்க, 01 ஆம் இலக்க பத்திரத்தில் 01 ஆம் இலக்க துண்டாகக் காட்டப்பட்டுள்ள முழுக் காணியின் விஸ்தீரணத்தில் 1.6187 ஹெக்டயார் விஸ்தீரணத்தினைக் கொண்ட காணியின் விபரங்கள் பின்வருமாறு :

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர் : கம்மல்கொடவத்த ஹேன்யாய, கலுகலபெத்த மற்றும் களுகஹஹேன; விபரம் : வீட்டுக் காணி, 20 - 25 வயதான கறுவாத் தோட்டம், 15 - 20 இற்கு இடைப்பட்ட வயதுடைய தேயிலை மற்றும் கறுவாத் தோட்டம், 10 - 20 வயதுடைய 60 எட்டோணியா மரங்கள், 2 மா மரங்கள், 02 மஹோகணி மரங்கள், 05 தென்னை மரங்கள், 20 - 30 இற்கு இடைப்பட்ட வயதுடைய 02 மா மரங்கள் மற்றும் 02 பலா மரங்கள், 30 காட்டு வேம்பு மரங்கள் மற்றும் 30 - 40 வயதுக்கு இடைப்பட்ட 02 பலா மரங்கள்; ஆரம்ப உரிமை கோருவோர் : அபேசிரிநாராயன வனிகரத்ன நந்தசிரி மற்றும் ஏனைய நபர்கள்; விஸ்தீரணம் : 1.6187 ஹெக்டயார்.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு முலட்டியன பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விந்தியா டீ. சமரக்கொடி,
பிரதேச செயலாளர்,
முலட்டியன.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
முலட்டியன,
2024, திசெம்பர் 04.

EOG 12 - 0085

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: DSWE/LND/2/F1/47.

1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் படி 2024.07.29 ஆந் திகதிய 2395/06 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட வர்த்தமானப் பத்திரிகையில் III ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்ட எனது குறிப்பு இல. DSWE/LND/2/F1/47 உம் 2024, மாச்சு மாதம் 06 ஆந் திகதிய அறிவித்தல் படி குறிப்பிடப்பட்ட திகதி நேரம் நஷ்டஈடு கோரும் திகதியும் கீழே குறிப்பிடும் முறைப்படி இத்தால் திருத்தம் செய்கின்றேன்.

9 ஆம் பிரிவு உரிமை சரிபார்த்தல் திகதியும் நேரமும் - 2025.02.17 மு.ப. 10.00

உரிமை கோருதல் சமர்ப்பிக்க வேண்டிய திகதி - 2025.02.10

ஐ.ஆர்.கே. விதாரண,
பிரதேச செயலாளர்,
வீரகெட்டிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
வீரகெட்டிய,
2024, திசெம்பர் 05.

EOG 12 - 0086